ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2105/35 - 2019 ජනවාරි මස 10 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.01.10

*2105/35 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# *பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி*

## *உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்*

### *(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1) (அ) என்னும் பிரிவின் கீழ் பண்டாரவளை மாநகர சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்*

*இறப்பெய்தியமை காரணமாக பண்டாரவளை மாநகர சபையின் உறுப்பினரொருவரின் பதவி வெற்றிடமாகி யிருக்கின்றதா தலாலும் ;*

*மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 66அ(1)(அ) என்னும் பிரிவின் கீழ் இலக்கம் 05 பண்டாரவளை மேற்கு வட்டாரத்தின் தெரிவு செய்யப்பட்ட நலீன் பிரியந்த சூரியகே என்பவர் அங்கம் வகிக்கின்ற சுயேச்சைக் குழு இல. 01 இன் தலைவர் முப்பது (30) நாட் காலக் கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அச் சுயேச்சை குழுவை சேர்ந்தவரும் பண்டாரவளை மாநகர சபையின் இலக்கம் 05 பண்டாரவளை மேற்கு வட்டாரத்தின் உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;*

*மேலே கூறப்பட்ட சுயேச்சைக் குழுவின் தலைவரால் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்காக ஹீன்கெந்த முதியன்சேலாகே மித்ரபால ஹீன்கெந்த என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;*

*இப்போது பண்டாரவளை மாநகர சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் எச். ஐ. ஆர். ஹத்துருசிங்ஹ ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 66 அ (1) (அ) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, ஹீன்கெந்த முதியன்சேலாகே மித்ரபால ஹீன்கெந்த என்பவர் பண்டாரவளை மாநகர சபையின் இலக்கம் 05 பண்டாரவளை மேற்கு வட்டாரத்தின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் வெளிப்படுத்துகிறேன்.*

*எச். ஐ. ஆர் ஹத்துருசிங்ஹ,*
*தெரிவத்தாட்சி அலுவலர்,*
*பண்டாரவளை மாநகர சபை.*

*மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,*
*பதுளை,*
*2019, சனவரி 09.*

*01- 635*

1A - G 29220— 27 (2019/01) *இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*